ஸ்ரீ:

ஸ்ரீ லக்ஷ்மி ந்ருசிம்ம பரப்பிரம்மணே நமஹ:







# ஸ்ரீ சந்தானவல்லி நாயிகா சமேத ஸ்ரீ வைகுண்டநாத பெருமாள் தாயார் சன்னதி நூதன விமான ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா சம்ரோஷணப் பத்திரிகை

அக்ரேபர்த்து: ஸரஸிஜமயே
பத்ரபீடே நிவிண்ணாம்
அம்போ ராசேரதிகத ஸீதா
ஸம்ப்லவாதுத்திதாம் த்வாம்!
புஷ்பாஸார ஸ்த்தகிதபுவனை:
பூஷ்பகலாவர்த்த காத்யை
க்லுப்தாரம்பா: கநககலசை:
அப்யஷீஞ்சந் கஜேந்த்ரா: !!

அன்புடையீர்,

ஸ்ரீ முக்திதரும் நகரேழில் முக்கியமாம் கச்சிதன்னில் நகரேஷீ காஞ்சி எனப் பிரசித்தியுள்ள சத்திய வரத க்ஷேத்திரத்தின் ஸ்ரீ பேரருளாளன் திருவுள்ளத்திற்கு ஒப்பானதும் பாலாற்றிற்கு தென்புரத்தில் அமைந்துள்ளதும் ஸ்ரீ ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்திர மஹா தேசிகனும் பிரதிஷ்டை செய்யப்பட்டும் பிரதி சித்ரா பௌர்ணமி அன்று காஞ்சிபுரம் தேவராஜன் எழுந்தருளி மண்டபப்படி செய்வதுமான தூசி கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் **வைகுண்டநாதன் சமேத ஸ்ரீ சந்தானவல்லி தாயாருக்கு நூதன விமான அஷ்டபந்தன மஹா ஸம்ரோஷணம்** ஸ்வஸ்திஸ்ரீ விக்ருதி வருடம் பங்குனி மாதம் **10-ஆம் தேதி** வியாழக்கிழமை பஞ்சமி திதி, **(24-3-2011)** காலை **9-00** மணிமுதல் **10-30** மணிக்குள் அனுஷ நட்சத்திரம் ரிஷப லக்கினத்தில், சுபதினத்தில் மஹா சம்புரோக்ஷணம் நடக்கிறபடியால் ஆஸ்தீக மக்கள் அனைவரும் வந்திருந்து சேவித்து எல்லாவிதமான மங்களங்களையும் பெற்றுய்யுமாறு எம்பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்,

**தூசி அக்ராரத்திற்குட்பட்ட**
**ஸ்ரீசந்தானவல்லி நாயிகா ஸமேத**
**ஸ்ரீ வைகுந்தநாதப் பெருமாள் கைங்கர்ய சபா**

தூசி கிராமம், **தூசி கிராம பொதுமக்கள்.**

## நிகழ்ச்சி நிரல்:

**விக்ருதி வருடம் பங்குனி மாதம் 9-ம் தேதி புதன்கிழமை (23-3-2011)**

| | |
|---|---|
| காலை 10-00 மணிக்குமேல் | ஆசார்யவாணம், ஆசார்ய ரித்விக்வர்ணம், பகவத் பிரார்த்தனை வேத பிரமந்த இதிகாச புராண தொடக்கம், புண்யாவாசனம், ம்ருத்ஸங்கிரகணம், அங்குரார்ப்பனம், வாஸ்து சாந்தி, கலச ஸ்தாபனம், அக்னி பிரதிஷ்டை களாகர்ஷணம், கும்ப அவாஷனம், திருவாராதனம், ஹோமம், பூர்ணாஹுதி, அஷ்டபந்தனம் சாற்றுதல். |
| மாலை 5-00 மணிமுதல் 10 மணிக்குள் | சதுர்கலச திருமஞ்சனம், ஸ்தாபனம், மஹா சாந்தி, விசேஷ திருமணம், ரக்ஷா பந்தனம், சயனாதிவாசம், ஹோத்திரம் ஸர்வதேவார்சனம், பூர்ணாஹுதி. |

**விக்ருதி வருடம் பங்குனி மாதம் 10-ம் தேதி வியாழக்கிழமை (24-3-2011)**

| | |
|---|---|
| காலை 6-00 மணிக்கு | விஸ்வரூப தரிசனம், யாகசாலை திருவாராதனம் மஹா பூர்ணாஹுதி **நூதன விமான ஜீர்ணோத்தாரண கும்ப புறப்பாடு, மஹா சம்புரோஷணம்** |
| காலை 9-00 மணிமுதல் 10-30 மணிக்குள் ரிஷப லக்னம் | **மஹா நிவேதானம், சோபானாக்ஷிதை, பிரம்மகோஷம், வேத பிரபந்த சாற்றுமறை கோஷ்டி தீர்த்த பிரசாத வினியோகம்** |

அன்னை ஆப்செட் அச்சகம், தூசி. ☎: 27242290